பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 29 வியாழக்கிழமை 12.01.2023 கதிர் 67

### இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உட்பட நான்கு இலங்கையர் மீது கனடா விதித்திருக்கும் தடை நடவடிக்கையை மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு சிறிய அம்சமாகத் தென்பட்டாலும், அதற்குள் மிக ஆழமான 2


## மைத்திரி உட்பட பல முக்கியஸ்தர்களுக்கு எதிரான ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் வழக்கின் தீர்ப்பு இன்று!

### 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது உயர்நீதிமன்ற முடிவு வருகிறது

போதுமான உளவுத் தகவல்கள் இருந்தும் 21/4 உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களை தடுக்க தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசே. உட்பட பலருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளும் கடந்த 2022 ஒக்டோபர் 5 ஆம் திகதி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டன.

இந்நிலையில் குறித்த மனுக்களின் தீர்ப்பு, இன்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என உயர்நீதி மன்றம் அறிவித்துள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, எல்.டி.பி.தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய ஏழுபேர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன் 2



# தமிழரசுக் கட்சி வெளியேறினாலும் கூட்டமைப்பு பலம் அடைந்துள்ளது

## ரெலோத் தலைவர் செல்வம் எம்.பி. தெரிவிப்பு
## கஜேந்திரகுமாரையும் இணையுமாறு அழைப்பு



(வவுனியாச் செய்தியாளர் கி.வசந்தரூபன்)

வவுனியா,ஜனவரி 12

**தமிழரசுக் கட்சி வெளியேறினாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் மீள இணைந்துள்ளமையால் இந்தக் கூட்டுப் பலமடைந்துள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தக் கூட்டில் வந்து இணைய வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.** 10

### வருடத்தின் முதல் வாரத்தில் 2,142 டெங்கு நோயாளர்கள்

வருடத்தின் முதல் வாரத்தில் 2,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு 10

### வவுனியாவில் பாடசாலை அதிபரை கொட்டனினால் தாக்கிய மாணவன்

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றின் அதிபர் மீது உயர்தர மாணவன் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாணவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் 10

### தொண்டைமானாறு கடல் நீரேரியில் முதியவரின் சடலம்



தொண்டைமானாறு,செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு பின்புறமாக உள்ளகடல்நீரேரியில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை அப்பகுதியில் நீராடச் சென்றவர்கள் சடலம் ஒன்று மிதப்பதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். 10

### மோ.சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் சுட்டுக் கொலை



மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இன்று காலை பனாமுர கெம்பனே பகுதியில் இந்த துப்பாக்கிச் 10

### ஆஷு மாரசிங்கவை சிக்கலில் மாட்டிய முன்னாள் காதலி கைது

பேராசிரியர் ஆஷு மாரசிங்கவிடம் 10 கோடி ரூபா கப்பம் கோரி அச்சுறுத்துவதற்காக, ஆபாச வீடியோ ஒன்றை பொது வெளியியில் வெளியிட்டார் எனக் கூறி, அவரின் முன்னாள் காதலியான ஆதர்ா கரடான என அறியப்படும் கரடான 10

## மைத்திரி,டலஸ்,வீரவன்ஸ,வாசு,கம்மன்பில்ல சேர்ந்து 'சுதந்திர மக்கள் கூட்டணி' உதயம்!

நாட்டின் சிறந்த எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள 'சுதந்திர மக்கள் கூட்டணி' உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 90 சதவீத வெற்றியை பதிவு செய்யும். இந்தக் கூட்டணியால் நாட்டை நிச்சயம் கட்டியெழுப்ப முடியும். அதற்கு மக்கள் முழுமையான ஆதரவை வழங்குவார்கள் என நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'சுதந்திர மக்கள் கூட்டணியின்' அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று புதன்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே 2





## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் பொதிந்திருக்கின்றமை சுட்டிக் காட்டப்படுகின்றது.

எப்படி இந்த நான்கு பேர் தெரிவானார்கள்? இந்த நான்கு பேர் தெரிவும் சொல்லும் செய்தி என்ன? – என்பவற்றை ஆராயப் புறப்பட்டால் அதற்குள் மிக ஆழமான விவகாரங்கள் பொதிந்து இருப்பதை நாம் உணர முடியும்.

சகோதரர்களான இரண்டு ஜனாதிபதிகளையும் விடுங்கள். மற்றைய இருவரும் படைகளில் கீழ் மட்டத்தினர்.

ஒருவர் – மிருசுவில் படுகொலையில் குற்றம் இழைத்தவர் என்று நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர். உயர் நீதிமன்றமும் அந்தக் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டமையை அங்கீகரித்து, மரண தண்டனையை உறுதிப்படுத்தியது. அவரை மன்னிப்பு வழங்கி விடுவித்தவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

மற்றவர் – ரவிராஜ் எம்.பி. படுகொலை மற்றும் கொழும்பில் 11 அப்பாவி மாணவர்கள் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்ட நிலையில், திருகோணமலைக் கடற்படைத் தள சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர், படுகொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்.

இந்த இருவரும் கீழ் மட்டத்தினர். அவர்கள் கொடூரக் குற்றங்களைப் புரிந்த சமயத்தில், மேல் மட்டத்தில் ஜனாதிபதியாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் இருந்தவர்கள் ராஜபக்ஷ சகோதரர்கள்.

கீழ் மட்டத்தில் கொடூரக் குற்றங்கள் விளைத்தவர்களையும், அச்சமயத்தில் உயர் மட்டத்தில் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தவர்களையும் ஒரே பட்டியலில் தடை செய்து அறிவிப்பதன் மூலம் கனடா கூற விழையும் செய்தி என்ன?

ஒரே தடையில் கீழ் மட்டத்தில் குற்றங்களை இழைத்தவர்களையும், அதே சமயத்தில் உச்சமட்டத்தில் அதிகாரங்களில் இருந்தவர்களையும் தொடுப்பதன் மூலம், குற்றங்களுக்கான பொறுப்புக் கூறல் chain of command என்ற அடிப்படையில் அடங்கி, ஒவ்வொரு குற்றத்துக்கும் அதிகாரத்தில் இருந்தபடி அவற்றுக்கு அனுமதித்து, ஆதரவளித்து, நின்றவரும் பொறுப்புக் கூற வேண்டும் என்ற செய்தியையே கனடா இதன் மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றது.

கனடாவில் இந்தத் தடை தொடர்பில் கொழும்பில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களுக்கு இதுதான் காரணம்.

அது மாத்திரமல்ல, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை விடயத்தைக் கையாளும் இணை அனுசரணை நாடுகளில் அமெரிக்காவுடன் சேர்ந்து இயங்குவது கனடாவே.

ஏற்கனவே இலங்கைப் படை அதிகாரிகளுக்கு எதிரான தடைகளை அமெரிக்கா எடுத்திருக்க..., அதே விடயத்தை அமெரிக்கா வழியில் கனடாவும் கையாளப் புறப்பட்டிருக்கின்றது.

அத்தோடு விடயம் அடங்கிவிடவில்லை. இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் உலக நாடுகள் தவறிழைத்தோரை இலக்கு வைத்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெளிவாக மனித உரிமைகள் ஆணையாளர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

அந்த வகையில் அமெரிக்காவுக்கு அடுத்து அத்தகைய இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கையை கனடாவும் ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்பம் இலங்கையைக் கலைத்து, தொல்லை கொடுக்கப் போகின்றது என்றே தோன்றுகிறது.

- மின்னல் -

## மைத்திரி,டலஸ், .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

நாட்டின் எதிர்காலம், மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் கடும் நெருக்கடிகள் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலேயே நாம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம். சிறந்த ஆட்சியொன்றை முன்னெடுப்பதற்கு நாட்டில் ஜனநாயகம் என்பது அடிப்படை அத்தியாவசிய தேவையாகும்.

இந்த கூட்டணியை ஸ்தாபிப்பதற்காக கடந்த ஓரிரு வாரங்களாக கடுமையாக பாடுபட்டோம். உள்ளூராட்சித் தேர்தலை இலக்காகக் கொண்டே நாம் இந்த கூட்டணியை அமைத்துள்ளோம்.

அதற்கமைய மக்களின் முழுமையான ஆதரவுடன் நாம் முழு நாட்டிலும் வெற்றி பெறுவோம். 90 சதவீத வெற்றியை எம்மால் பதிவு செய்ய முடியும். வடக்கு, கிழக்கில் நாம் போட்டியிடுவோம். இந்த கூட்டணியால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு மக்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.' – என்றார்.

ஜன ஜய பெரமுனவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா அங்கு உரையாற்றுகையில் –

'இவ்வாறானதொரு பலம் மிக்க கூட்டணியை அமைப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. நாட்டில் ஏற்பட்ட உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலைமைக்கான காரணம் அரசியல் முறைமைகளில் காணப்பட்ட தவறுகளாகும். ஆட்சி மாற்றத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்த்த எதுவுமே இடம்பெறவில்லை. எனவே எமது இந்த கூட்டணிக்கு சரியான பாதையில் பயணிக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்க்கமானதாகும். தலைவர்களின் பின்னால் செல்லும் அரசியல் கலாசாரம் மாற்றம் பெற வேண்டும். எனவே தான் இந்தக் கூட்டணியை தலைவர் ஒருவரின் கீழ் வழிநடத்தாமல், தலைமைத்துவ சபையை அமைத்துள்ளோம் என்றார்.

உத்தர லங்கா சபாகயவின் தலைவர் விமல் வீரவன்ஸ உரையாற்றுகையில் –

'சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்கு புதிய அரசியல் முறைமையொன்று அத்தியாவசியமானதாகும். அந்த பொறுப்பினையே நாம் தற்போது ஏற்றுள்ளோம். இலங்கையின் நிதி நெருக்கடியின் பாரதூர தன்மை குறித்து பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நிபுணர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இவ்வாறான அபாயமான நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு எந்தவொரு முடிவினையும் எடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.' – என்றார்.

சுதந்திர மக்கள் பேரவையின் தலைவர் டலஸ் அழகப்பெரும உரையாற்றுகையில் –

'கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான 23 கட்சிகள் நாட்டுக்கான தீர்க்கமான தீர்மானத்தை எடுத்தன. அதே போன்று ஒற்றுமையுடன் புதிய கூட்டணியில் எதிர்காலத்திலும் பயணிக்க வேண்டும். இந்தக் கூட்டணியில் 12 பிரதான கட்சிகள் உள்ளன. இவற்றில் 36 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். 22 தேர்தல் மாவட்டங்களில் 17 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் உள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய அரசியல் கூட்டணிகளைப் போன்றல்லாது மற்றொரு புதிய முற்போக்கான அரசியல் கூட்டணி உருவாகியுள்ளது. இந்த நாடு ஆட்சியாளருக்கு சொந்தமானதல்ல. அதே போன்று எந்தவொரு கட்சியும் அதன் தலைவருக்கு சொந்தமானதல்ல. குடும்பமொன்றை கேந்திரமாகக் கொண்ட ஆட்சிக்கு உறுதுணையாக செயற்பட்டமை நாம் இழைத்த பெருந்தவறாகும். அந்த தவறை திருத்திக் கொள்ளும் வகையிலேயே இந்த புதிய கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.' – என்றார்.

## மைத்திரி உட்பட பல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

உயர் நீதிமன்றம் வழக்கை நிறைவுறுத்தி அனைத்து தரப்பினரும் தமது எழுத்து மூல சமர்ப்பணங்களை கடந்த 2022 ஒக்டோபர் 5 ஆம் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில் திகதி அறிவிப்பு இன்றி இவ்வழக்கின் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

வழக்கை விசாரணை செய்த நீதியரசர்கள் குழாமில் உள்ளடங்கும் நீதியரசர் தெஹிதெனிய நாளை 13 ஆம் திகதியுடன் ஓய்வு பெறும் நிலையில் , இன்று 12 ஆம் திகதி மனுக்கள் மீதான தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது.

21/4 தற்கொலை குண்டுத்தாக்குதலில் தனது இரு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலா துறை வர்த்தகர் ஜனக விதானகே, இரு கத்தோலிக்க மதகுருமார், ஸெங்ரில்லா ஹோட்டலில் குண்டுத்தாக்குதலில் சிக்கிய சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட 12 தரப்பினரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதில் பிரதிவாதிகள் தரப்பினராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய அமைச்சரவை, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி, பொலிஸ் மா அதிபர் பூஜித், தேசிய உளவுச் சேவையின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, தேசிய உளவுச் சேவை பிரதானியாக இருந்த சிசிர மெண்டிஸ் மற்றும் சட்ட மா அதிபர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டனர்.

இந்த 12 மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாக கடந்த 2019 ஒக்டோபர் 2 ஆம் திகதி உயர் நீதிமன்றம் அறிவித்தது. அது முதல் மனு மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி காமினி பெரேரா, சட்டத்தரணி தர்ன வேரதுவகே, சட்டத்தரணி வர்தனி கருணாரத்ன, சட்டத்தரணி லக்ஷான் டயஸ், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப், ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன, சட்டத்தரணி தனுக நந்தசிறி, ஜனாதிபதி சட்டத்தரணி மனோகரா டி சில்வா உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகி வாதங்களை முன் வைத்தனர்.

பிரதிவாதிகளில் சிலருக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி பிரியந்த நாவான, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே, சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அவந்தி பெரேரா, சிரேஷ்ட அரச சட்டவாதி சுரேகா அஹமட், அரச சட்டவாதி இந்துனி புஞ்சிஹேவா ஆகியோரைக் கொண்ட குழுவொன்று ஆஜரானது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரயாவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவும் ஆஜராகினர். ஏனைய பிரதிவாதிகளுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீஜகோன், ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி துலிந்த வீரசூரிய, சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன, சட்டத்தரணி கே.வி.எஸ். குனசேகரராஜன் உள்ளிட்டோர் ஆஜராகினர்.

இந்நிலையில், பிரதிவாதிகளில் ஒருவராக பெயரிடப்பட்டிருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அவ்வழக்குகளை முன்னெடுத்து

(10ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக தலைமைகள் செயற்படல் வேண்டும்!

## இரா.துரைரெட்னம் கோரிக்கை




தமிழர்களைப் பொறுத்த வரையில் ஒற்றுமையின் சின்னம் வீடு என்று அறிவிக்கப்பட்ட நிலையில் அனைத்து கட்சிகளையும் பயன்படுத்தி வீட்டுச்சின்னத்துக்கான அங்கீகாரத்தை எடுத்து விட்டு ஒரு கட்சி தனியே போட்டியிடுவது என எடுத்த தீர்மானம் மீளாய்வுசெய்யப்படவேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.பின் உப தலைவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரெட்னம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ள தமிழரசு கட்சி தேர்தலில் தனித்துவமாக செயற்பட முடிவெடுத்திருந்தாலும் கூட அதில் அங்கம் வருகின்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைக் கழகம் போன்ற கட்சிகள் அவ்வாறு முடிவுகளை எடுத்து விடாமல், தமிழ் மக்களின் கிழக்கு மாகாண மக்களின் ஏகோபித்த குரலாக ஒற்றுமையாகத் தமிழ்த் தலைமைகள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

தேர்தல் தொடர்பான சம்பந்தப்பட்ட விடயத்தில் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் மத்திய குழுவாகிய நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் வழிகாட்டுதலின் கீழ் பெயரில் மத்திய குழு கூட்டம் நடைபெற்றது. இந்த மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் வளர்ச்சி பெற வேண்டுமாயின் ஒற்றுமையின் கீழ் தேர்தலில் போட்டியிட வேண்டும் என எமது கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைவாக இதற்கான பேச்சில் ஈடுபடுமாறு எமது கட்சித் தலைமையிடம் நாங்கள் வேண்டுகோளை விடுத்துள்ளோம்.

இன்றோ நாளையோ சரியான தீர்வு கிடைக்கும் பட்சத்தில் அடுத்த கட்ட தேர்தலில் குதிப்பதற்கான தயார் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம்.

இந்த சூழ்நிலையில் ஜனநாயக ரீதியாக வாக்களித்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட மக்கள் உணர்ந்து இருக்கின்ற நிலையில், இந்த தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

தமிழர் விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கழகம், தமிழரசுக் கட்சி இதில் ஒரு கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த மத்திய குழு கூட்டத்தில் தனித்துவமாக உள்ளூராட்சி தேர்தலில் தனியே போட்டியிடுவதால் நன்மைகள், தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சிகள் அதிகம் உள்ளன என்ற எடுக்கப்பட்ட தீர்மானம் அந்த கட்சியின் ஜனநாயகத் தீர்மானம் ஆகும், அதை நாங்கள் வெறுக்கவில்லை.

ஆனால், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் – மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளைப் பொறுத்தவரையில் – கடந்த காலத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற விடயத்தைப் பொறுத்தவரையில் – தமிழர்கள் ஒரு குடையின் கீழ் அணி திரளப்பட வேண்டும் என்பது தமிழர்களுடைய நிலைப்பாடு.

தமிழ் மக்கள் ஒற்றுமையே எமது சின்னம் வீடு என்ற அறிவிக்கப்பட்ட நிலையில், வாக்களிக்கப்பட்ட நிலையில் ஒரு கட்சி எல்லா கட்சியையும் பயன்படுத்திக் கொண்டு வீட்டு சின்னத்துக்கான அங்கீகாரத்தை எடுத்து விட்டு, தனியே தேர்தலில் போட்டியிடுவது என்ற தீர்மானம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

இந்த நிலையில் எமது கட்சி, ஒற்றுமையுடன் செயற்பட நாம் மிகவும் தயாராக உள்ளோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ள தமிழரசு கட்சி தேர்தலில் தனித்துவமாக செயற்பட முடிவெடுத்திருந்தாலும் கூட அதில் அங்கம் வருகின்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைக் கழகம் போன்ற கட்சிகள் அவ்வாறு முடிவுகளை எடுத்து விடாமல், தமிழ் மக்களின் கிழக்கு மாகாண அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மக்களின் ஏகோபித்த குரலாக ஒலிக்கின்ற ஒற்றுமையாக தமிழ்த் தலைமைகள் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் நிலை நாட்டுவார்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

தமிழரசு கட்சி எடுத்திருக்கின்ற தீர்மானம் ஜனநாயக ரீதியாக அவர்களின் முறையில் சரியாக இருந்தாலும், மக்கள் அந்த தீர்மானத்தை விரும்பவில்லை என்ற வழிகாட்டுதல்கள் கடந்த வடக்கு கிழக்கு ஆர்ப்பாட்டங்கள், அனைவரும் ஒன்றாக சேர வேண்டும், அணி திரள வேண்டும், என்று பல ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ள நிலையில் தமிழீழ விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய கட்சிகள் இந்த விடயத்தில் ஒற்றுமையை நழுவிப் போகவிடாமல், ஒற்றுமையாக இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான செயல்படிவத்தைக் கொடுப்பார்கள், அப்படி கொடுத்தால் அதற்கு ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி தனது பங்களிப்புகளை ஒத்துழைப்புகளை நல்குவோம்.

மாகாண சபை முறைமை தொடர்பாக ஒரு சந்தோஷமான நல்ல செய்திகளை நாங்கள் தினந்தோறும் அறியக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக மாகாண சபை முறைமையை விரைவாக அமுல்படுத்துங்கள், மாகாண சபை தேர்தலை நடத்துங்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள விடயங்களை அமுல்படுத்துங்கள், என்ற கோரிக்கைகளை தமிழ் சிங்கள கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முதல் தமிழ் நாட்டில் நடந்த கட்சிகளின் மாநாட்டில் கூட மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும் என்கின்ற நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள கட்சிகளும் மலையகக் கட்சிகளும் மாகாண சபை முறைமையை அமுல்படுத்துங்கள் என்ற நிலையில், எமது நாட்டு ஜனாதிபதி அவர்கள் அடுத்த வாரம் இந்தியா பயணம் செய்யக் கூடியதை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் சர்வதேச ரீதியாக ஐக்கிய நாட்டு சபைக்கு கூட மாகாண சபை முறைமையை அமல்படுத்துங்கள் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி அவர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்ய உள்ளார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையில் அமுலாக்கப்பட்ட இலங்கை இந்தியா ஒப்பந்தம் ஊடாக மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும், மாகாண சபை முறைமையில் உள்ள அதிகாரங்கள் சட்ட ரீதியாக சில அதிகாரங்கள் நிறுத்தப்பட்டாலும் அதிகமானவற்றை அமுல்படுத்தக் கூடியவாறு 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள விடயங்களை அமுல்படுத்தக்கூடியவாறும் கிழக்கு மாகாணத்துக்குரிய, வட மாகாணத்துக்குரிய இலங்கையில் மாகாணசபைக்குரிய தேர்தலை விரைவாக நடத்தச் சொல்லக் கூடியவாறும், அதற்கான முழு ஒத்துழைப்புகளையும் அதிகாரங்களையும் அமுல்படுத்துவதற்கு இந்தியா, இலங்கை ஜனாதிபதியிடம் முன் வைக்க வேண்டும் என பகிரங்கமாக வேண்டுகோளை விடுக்கின்றேன். – எனத் தெரிவித்தார்.

# கூட்டமைப்புக்குத் தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் எச்சரிக்கை விடுப்பு!




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவு கிழக்கிலே தமிழர்களின் இருப்பை நிச்சயமாக கேள்விக்குறியாக்கும். எனவே இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று போட்டியிட்டால் அதற்கு எதிராக மக்களைத் தூண்டி இவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் என செயற்படவேண்டிவரும் என மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கே.மோகான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு செங்கலடியிலுள்ள தமிழ் உணர்வாளர் அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற விசேட ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்ற தேர்தலிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரிந்துநின்று தேர்தல் களத்தில் குதித்திருப்பது வடக்குக் கிழக்கில் தமிழ் தேசியத்தை விரும்புகின்ற அனைவருக்கும் ஒரு பெரும் அதிர்ச்சியான செய்தி இருக்கின்றது.

நாங்கள் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்ட கருத்தைக் கொண்டிருந்த போதிலும் தமிழ்த் தேசியத்தை விசுவாசிப்பதன் காரணத்தால் நாங்கள் இந்த முடிவை எடுத்திருக்கின்றோம்.

இம்முறை நடைபெறுகின்ற இந்தத் தேர்தலிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரிந்து நின்று தேர்தல்களத்தில் குதிக்குமாக இருந்தால் நாங்கள் இவர்களுக்கு எதிராக மக்களைத் திசை திருப்புவோம்.

இது ஓர் ஆரம்ப பிரிவாக இருந்தால் கூட காலப்போக்கில் பாரிய பின்னடைவைச் சந்திக்க நேரிடும் தமிழ்த் தேசிய நீரோட்டத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த பங்களிப்பும் இல்லாமல் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இப்போது தீர்வாக அமையாது. எனவே வடக்கு கிழக்குத் தமிழர்களின் நன்மைகருதி அதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு குடையின் கீழ் பயணிக்க வேண்டிய கட்டாய தேவை இருக்கின்றது. 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கு அடித்தளமிடப்பட்டது கிழக்கில் இருந்துதான். எனவே இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவு கிழக்கிலே தமிழர்களின் இருப்பை நிச்சயமாகக் கேள்விக்குறியாக்கும்.

அதனைவிட கிழக்கிலே இருக்கின்ற சில தமிழ் உதிரி கட்சிகளுக்கு இது வாய்ப்பாக அமைந்துவிடக் கூடிய சூழல் அமையும். எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு குடையின் கீழ் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இதனை மறுத்து தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் உணர்வாளர் அமைப்பு இவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி இவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் என செயற்பட வேண்டிவரும். எனவே அவசரமாகவும் அவசியமாகவும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் முடிவை எடுக்க வேண்டும் என்பது எங்களது நிலைப்பாடு. – என்றார்.

# முஸ்லிம்கள் மற்றும் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி முயற்சி!



தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுத்த பின்னர் பெருந்தோட்ட மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு அமைய ரணில் விக்கிரமசிங்க அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் எனக் கூறினார்.

தமிழ் மக்களின் பல பிரச்சினைகளுக்கு ஏற்கனவே தீர்வு காணத் தொடங்கியுள்ள நிலையில், பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கியதன் பின்னர், இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பெருந்தோட்ட மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பேச ஜனாதிபதி மேலும் உத்தேசித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூட்டுத் தலைமையில் வரும் கூட்டு

ஆளும் பொதுஜன பெரமுனைவின் (மொட்டுக் கட்சியின்) கூட்டிலிருந்து அவ்வப்போது பிரிந்து, பல்வேறு அணிகள், குழுக்களாக இயங்கி வந்த கட்சிகளும், தரப்புகளும் இப்போது ஒன்று கூடி 'சுதந்திர மக்கள் கூட்டணி' என்ற கட்டமைப்பை நேற்றுக் கொழும்பில் உருவாக்கி இருக்கின்றன.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதற்காக அவசர அவசரமாக சமைக்கப்பட்ட ஒரு கூட்டு இது. இதனால், அப்பட்டமாக இது ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 17 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 36 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டில் இடம் பெற்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார, தயா ஜெயசேகர, அநுர பிரியதர்ஷன யப்பா, பேராசிரியர் திஸ்ஸ விதாரண எனப் பல மூத்த தலைவர்கள் இந்த அணியில் இருந்தாலும், இந்த கூட்டணிக்கு எனத் தனி ஒருவர் தலைவராக இல்லை.

முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இந்தக் கூட்டமைப்பில் இருந்த போதிலும் –

அவரது சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இக்கூட்டமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்ற போதும் –

இந்தக் கூட்டணியின் தலைமைப் பதவி அவருக்குக் கொடுக்கப்படவில்லை. எவருக்கும் வழங்கப்படவும் இல்லை.

பல தலைவர்களைக் கொண்ட கூட்டுத் தலைமை அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் –

அதுவே, இந்தக் கூட்டின் விடயங்களை தலைமைத்துவச் சபையாகக் கையாளும் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

கூட்டுத் தலைமை ஒன்றினால் இத்தகைய கூட்டணி விடயங்களைக் கையாண்டு முடிவுகளை எடுப்பது சாத்தியமானதா, காத்திரமானதா என்பது கேள்விக்குறியே.

"Too many cooks spoil the soup' என்று மாதிரி, ஒரு கூட்டணியைப் பலதரப்பு சிந்தனைப் போக்குடையவர்கள் தலைமை வகித்துக் கையாள முற்பட்டால் கூட்டணியே மிஞ்சுமா என்பதுதான் கேள்வி.

ஒரு வண்டியைப் பல திசைகளில் பல மாடுகள் இழுத்தால் வண்டிதான் சிதைவுறும். வண்டி முன்நகராது. பலதரத் தலைவர்களின் கூட்டுத் தலைமையால் வழிநடத்தப்பட போகும் இந்த கூட்டின் கதியும் கூட அப்படித்தான் அமையும்...!

# நாட்டை மீட்க தலாய் லாமா இலங்கைக்கு வர வேண்டும்!

## பௌத்த பிக்குகள் கோரிக்கை



திபெத்திய ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் புத்த கயாவிற்கு புனித யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கையின் உயர்மட்ட பௌத்த பிக்குகள் குழுவே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு தலாய் லாமாவிற்கு அழைப்பு விடுத்துள்ளது. நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் இந்த நிலையில் தலாய் லாமாவின் விஜயம் அமையுமாயின் இலங்கை மீட்சி பெறும் எனத் தாங்கள் நம்புவதாக பௌத்த குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 27 ஆம் திகதி புத்த கயாவில் பௌத்த ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவை இலங்கையின் உயர்மட்ட பௌத்த பிக்குகள் குழு சந்தித்தது. அதேபோன்று அன்றைய நாள்களில் புத்த கயாவில் பெரும் திரளான உள் நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் காணப்பட்டனர்.

தலாய் லாமா ஏன் இந்தியாவிற்கு வந்தார்? பெரும் திரளான பன்னாட்டு மக்களும் ஏன் இங்கு வருகின்றனர் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஸ்ரீசம்புத்த சாஸனோதய சங்க சபை தலைவர் வணக்கத்திற்குரிய வஸ்கடுவ மகிந்தவங்ச மகாநாயக்க தேரர் ஏ.என்.ஐ செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணலின் போது குறிப்பிட்டிருந்தார்.

தலாய் லாமாவின் புனிதத்துக்கு இந்தியா உதவியது. இதன் காரணமாகவும் அவரது புனிதத்துவத்தின் பிரகாரமும் இன்று இந்தியாவிலும் புத்த கயாவிலும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர். கடும் குளிர்மிக்க இந்த நாள்களில் பொதுவாக மக்கள் வருவதில்லை. ஆனால் தலாய் லாமாவின புனிதத்தால் மக்கள் வருகின்றார்கள். இதனால் புத்தகயா பல வழிகளில் பயனடைகிறது எனக் குறிப்பிட்ட ஸ்ரீ சம்புத்த சாஸனோதய சங்க சபை தலைவர் வணக்கத்துக்குரிய வஸ்கடுவ மகிந்தவங்ச மகாநாயக்க தேரர், திபெத் பலன் பெற்றதா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். – என்றார்.



எனவே தான் தலாய் லாமா இலங்கைக்கு விஜயம் செய்வது அனைத்து வகையிலும் நாட்டுக்கு நல் வழிகளைக் காட்டும். குறிப்பாக இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கவும் தலாய் லாமாவின் விஜயம் உதவும் என இலங்கை பிக்குகள் குழு குறிப்பிட்டுள்ளது.

தலாய் லாமா புத்த கயாவிற்கு சென்றமை போல் இலங்கைக்கும் வர வேண்டும். அவர் இலங்கைக்கு வந்தால் பல ஆயிரக்கணக்கான பன்னாட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் வருவார்கள். இது பொருளாதாரத்தை மேம்படுத்தும். ஏனெனில் இலங்கை நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது. மேலும் அவர் இலங்கைக்கு வருவதால் நாங்கள் ஆசீர்வதிக்கப்படுவோம், பொருளாதாரமும் உயரும் எனவும் கூறினார்.

தலாய் லாமாவை சந்திப்பதற்கு இலங்கை ராமஞ்ஞ மகா நிகாயாவின் பிரதம பீடாதிபதி மகுலேவே விமல மகாநாயக்க உட்பட தேரர்களும் சென்றிருந்தனர். புனித தலாய் லாமா ஓர் ஆன்மீகத் தலைவர். அவரை அங்கு சந்தித்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். எங்களுக்கு ஆன்மீக செயற்பாடுகள் பற்றிய புரிதல் உள்ளது. எனவே, இலங்கையைச் சேர்ந்த மகாசங்கத்தினராகிய நாங்கள் அவரது புனிதத்துவத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்ததாக ராமஞ்ஞ மகா நிகாயா கூறியது.

வண. அஸ்கிரி பீடத்தின் தேரர் முருத்தேனிய தம்மரதன தேரர் கூறுகையில், உண்மையில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், புத்தர் ஞானம் பெற்ற இடமான புத்தகயா எங்கள் தாய்நாடு போன்றது. எனவே தான் இங்கு அதிக தடவைகள் வருகிறோம். இது எனது முதல் முறையல்ல. பல முறை வந்துள்ளேன். தலாய் லாமாவிடம் ஆசி பெறுவதற்கு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான லாமாக்கள் மற்றும் துறவிகள் வந்துள்ளனர். அவர்களையும் சந்திக்கும் அதிர்ஷ்டம் எங்களுக்குக் கிடைத்தது.

நாங்கள் அங்கு ஆயிரக்கணக்கான மக்களைக் கண்டோம். குறிப்பாக தலாய் லாமாவின் உரையைக் கேட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். மறுபுறம் அவருடைய போதனைகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தோம். இந்த சந்தர்ப்பத்தை பெரும் அதிஷ்டமாகவே கருதுகிறோம். – என்றார்.

இலங்கை 2022 இல் எதிர்கொண்ட நிதி நெருக்கடியிலிருந்து மீள முடியாது தீவு தேசத்தில் அரசியல் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட 400 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியை இந்தியா வழங்கியது. இதனால் இலங்கையால் ஓரளவிற்கு மூச்சு விட முடிந்தது என பௌத்த தேரர்கள் குழு குறிப்பிட்டுள்ளது. இந்தியாவிற்கு வருகை தந்த உயர்மட்ட இலங்கை பௌத்த பிக்குகள் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்ததோடு, சவால்களை சமாளிக்க தங்கள் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவை இலங்கைக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொண்டனர்.

எவ்வாறாயினும் திபெத்திய ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவை இதற்கு முன்னரும். இலங்கைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அரசியல் காரணங்களால் அது முடியாமல் போனது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் ஆதிக்கத்துக்கு உள்ளாகியிருந்தமையே இதற்கான காரணமாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் மீண்டும் தலாய் லாமாவின் இலங்கை விஜயம் தொடர்பில் பேசப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

# தரம் – 5 புலமைப்பரிசில் பெறுபேறு இந்த மாத இறுதிக்குள் வருமாம்!

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத்துக்குள் வெளியிட திட்டமிட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்னும் இரண்டு நாள்களில் பணிகள் நிறைவடையும் என்றும் அதன்பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இரண்டு ஆண்டுகளின் பின்னர் இம்முறை மீண்டும் காலை மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பொங்கல் தினமாகிய எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு இல.17 ,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

கலை நிகழ்ச்சிகள் மாலை 6.00 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில் அரங்கில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்து சிறப்பிப்பார்.கலை நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்கள் வழங்கும் பொங்கல் பாடல்கள்,திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'குசேலர்' இசைநாடகம் ஆகியனவும், தவறாது வரும் தைமகளும்,தவறாகிப் போகும் தலைமுறையும் என்னும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கமும் இடம்பெறும். கவிஞர் கு.வீரா தலைமையில் இடம்பெறவுள்ள கவியரங்கத்தில் கவிஞர்களான வேலணையூர் சுரேஷ், வெற்றி துஷ்யந்தன், மாவை நா.கஜேந்திரன்,தரங்கிணி நாவண்ணன் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பிப்பார்கள்.

இந்நிகழ்வுகளில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

# அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசிய சிரேஷ்ட பணிப்பாளர் ஜனாதிபதி ரணிலை சந்தித்தார்!



அமெரிக்கா தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் ரியர் அட்மிரல் ஐலின் லொவபக்கர் ஜனாதிபதியை சந்தித்தார்.

அமெரிக்கா தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் ரியர் அட்மிரல் திருமதி ஐலின் லொவபக்கர் நேற்று (புதன்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களைச் சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னெடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் பாராட்டுகளைத் திருமதி ஐலின் லொவபக்கர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பாக திருமதி லொவபக்கருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது மற்றும் அந்த நோக்கத்துக்காக கடல்சார் ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பிலும் கலந்துரையாடினார். இலங்கையின் கூட்டிணைவை அமெரிக்கா பாராட்டுகின்ற அதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆவலுடன் இருப்பதாகவும் திருமதி லொவபக்கர் இங்கு மேலும் குறிப்பிட்டார்.

# பொரளை சிறிசுமண தேரரை கைதுசெய்ய பிடியாணை பிறப்பிப்பு

திகோ குழும உரிமையாளர் திலினி பிரியமாலியால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் பண மோசடிக்கு உதவினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிணையில் உள்ள பொரளை சிறிசுமண தேரரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று (புதன்கிழமை) பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தால் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன உள்ளிட்ட சந்தேகநபர்கள் நேற்று (புதன்கிழமை) நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

# இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் மீளவும் வீழ்ச்சியுறும்!

## உலக வங்கி எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் மீண்டும் வீழ்ச்சியடையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் எரிபொருளுக்குச் செலுத்துவதற்கான அந்நிய செலாவணி இல்லாமல் போனதால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததால் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. இதன் காரணமாக இலங்கையின் உற்பத்தி 2022 இல் 9.2 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என மதிப்பிடப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான அறிக்கையிலேயே உலக வங்கி இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அதிகாரிகள் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை உணவு மருந்து எரிபொருள் தட்டுப்பாடுகளை மக்கள் எதிர்நோக்குவது தொடர்பாக உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது.

நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் வறுமையை அதிகரித்துள்ளதுடன் கடந்த தசாப்த காலத்தில் பெறப்பட்ட பலாபலன்களை இல்லாமல் செய்துள்ளன எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.3 வீதத்தால் வீழ்ச்சியடையும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொடரும் அந்நியசெலாவணி, பிரச்சினைகள் உயர் பணவீக்கத்தின் தாக்கம், முக்கிய வர்த்தக சகாக்களின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி காரணமாக 2023 ஆம் ஆண்டு குறித்து முன்னர் எதிர்வு கூறப்பட்டவற்றை மாற்றவேண்டிய நிலையேற்பட்டுள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது.

தென்னாசிய தொடர்பில் தெரிவித்துள்ள உலக வங்கி, உக்ரைன் யுத்தத்தின் தாக்கங்களை இந்தப் பிராந்தியம் தொடந்தும் அதிகரிக்கின்றது எனத் தெரிவித்துள்ளது.

தென்னாசிய பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி 2023 இல் 5.3 வீதமாக காணப்படும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

### இரண்டு கோடி ரூபா இலஞ்ச விவகாரம்;

# முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக பிரதானியின் தண்டனையை உறுதி செய்தது உயர் நீதிமன்றம்!

கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் இயந்திர உபகரணங்களைப் பெற்றுத் தர சிபாரிசு செய்ததற்காக 10 கோடி ரூபா இலஞ்சம் கோரி அதில் முற்பணமாக 2 கோடி ரூபாவை இலஞ்சமாக பெற்ற விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் அலுவலக பிரதானியாக செயற்பட்ட ஐ.கே. மஹநாம மற்றும் மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திஸாநாயக்க ஆகியோரின் தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உறுதி செய்தது.

குறித்த இருவரினதும் மேன் முறையீட்டு மனுக்களை கடந்த 2021 மார்ச் 16 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம் நேற்று அது தொடர்பில் தீர்ப்பை அறிவித்து, விசேட நிரந்தர மேல் நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்தது.

நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான , எல்.ரி.பி. தெஹிதெனிய, ப்ரீத்தி பத்மன் சுரசேன, எஸ். துரைராஜா மற்றும் யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்களைக் கொண்ட குழாம் இதற்கான தீர்ப்பை அறிவித்தது.

இந்த இலஞ்ச விவகாரம் தொடர்பில் கடந்த 2018 மே 3 ஆம் திகதி மேற்படி இருவரும் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிரான விசேட நிரந்தர மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததை அடுத்து கடந்த 2019 செப்ரெம்பர் 5 ஆம் திகதி முதல் விசாரணைகள் இடம்பெற்றன. இருவருக்கும் எதிராக 24 குற்றச்சாட்டுக்கள் சட்ட மா அதிபரால் சுமத்தப்பட்டிருந்தன.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டவாதி (தற்போதைய பிரதி சொலிஸிட்டர் ஜெனரல்) ஜனக பண்டார மன்றில் ஆஜரானதுடன் முதல் பிரதிவாதியாக பெயரிடப்பட்ட ஜனாதிபதியின் முன்னாள் செயலணி பிரதானி ஐ.கே.மஹநாம சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆஜராகினார். 2 ஆம் பிரதிவாதியான மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி. திஸாநாயக்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அரசகுலரத்ன ஆஜராகி வாதிட்டிருந்தார்.

இந்நிலையில் விசாரணைகள் நிறைவு பெற்ற நிலையில் கடந்த 2019 டிசெம்பர் 19 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதன்போது சட்ட மா அதிபர் முன்வைத்த 24 குற்றச்சாட்டுக்களில், முதல் பிரதிவாதியாக பெயரிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் செயலணி பிரதானி ஐ.கே. மஹநாம 13 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டார். அத்துடன் 2 ஆம் பிரதிவாதியான மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி. திஸாநாயக்க 11 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இதனையடுத்தே தண்டனை விவரத்தை அறிவித்திருந்த, விசேட நிரந்தர மேல் நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதியின் முன்னாள் செயலணி பிரதானி ஐ.கே. மஹநாமவிற்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தது. அத்துடன் 65 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது. அத்துடன் அவர் பெற்ற 2 கோடி ரூபா இலஞ்சத்தையும் மீள செலுத்தவும் அவருக்கு இதன்போது உத்தரவிடப் பட்டது. அத்துடன் மரக் கூட்டுத்தாபணத்தின் முன்னாள் தலைவர் பி. திஸாநாயக்கவுக்கு 12 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்த நீதிபதிகள் 55 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தும் தீர்ப்பளித்தனர்.

இந்த தண்டனைக்கு எதிராக உயர் நீதிமன்றில் விசேட மேன் முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தண்டனை விதிக்கப்பட்ட முறைமை முற்றிலும் தவறானது எனவும், அதனால் அத்தண்டனையை ரத்து செய்து தம்மை விடுவித்து விடுதலை செய்யுமாறும் மேன் முறையீட்டில் கோரப்பட்டிருந்தது.

இதனை விசாரித்த உயர் நீதிமன்ற ஐவர் கொண்ட நீதிபதிகள் குழாம் விசேட மேல் நீதிமன்ற தீர்ப்பை சரியானது என ஏகமனதாக அறிவித்து மேன் முறையீட்டை நிராகரித்து தீர்ப்பளித்தது.

# பொது நிர்வாக அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை சட்டவிரோதமான ஒன்று!




கட்டுப்பணம் பெறுவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொதுநிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை சட்டவிரோதமானது என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணம் பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்தி செவ்வாய்க்கிழமை சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த சுற்றறிக்கை தொடர்பாக ருவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்திலேயே டலஸ் அழகப்பெரும இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த சட்டத்துக்கு புறம்பான, சட்டவிரோதமான உத்தரவை தைரியமான எந்தவொரு அரச அதிகாரியும் பின்பற்ற மாட்டார்கள் என்றும் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசக் கடற்படை மதிப்பாய்வில் பங்களாதேஷில் இந்தியக் கடற்படை

இந்தியாவின் கிழக்குக் கடற்படைக் கட்டளைத் தளபதியின் கீழான இந்தியக் கடற்படையின் மூன்று போர்க் கப்பல்களைக் கொண்ட வைஸ் அட்மிரல் பிஸ்வஜித் தாஸ்குப்தா தலைமையிலான இந்தியக் கடற்படைக் குழு, டிசம்பர் 7ஆம் திகதி காக்ஸ் பஜாரில் வங்காளதேசம் நடத்திய முதல் சர்வதேச கடற்படை மதிப்பாய்வில் (IFR) பங்கேற்றன என்பது முறைப்படி அரசிடம் வெள்ளியன்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, வங்காளதேச கடற்படையின் கப்பல்கள் மற்றும் ஆறு வெளிநாடுகளில் இருந்து எட்டு கப்பல்கள் அடங்கிய சர்வதேச கடற்படையை மதிப்பாய்வு செய்தார்.

இந்த சர்வதேச கடற்படை மதிப்பாய்வில் பங்கேற்ற வெளிநாட்டு கடற்படைகளில் மூன்று கப்பல்களுடன், இந்திய கடற்படைக் குழு மிகப்பெரியது. மற்ற ஐந்து கப்பல்கள் சீனா, மலேசியா, மியன்மார், தாய்லாந்து






மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்தவை என்று பாதுகாப்பு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்படையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த மூன்று கப்பல்களும் முறையே, வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்பான் ஐ.என்.எஸ். கொச்சி, நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் கார்வெட் ஐ.என்.எஸ். கவரத்தி மற்றும் கடல் ரோந்துக் கப்பல் சுமேதா ஆகியவை. இவை உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட போர்க்கப்பல்களாகும். பங்களாதேஷில் நடைபெற்ற இந்த பன்னாட்டு நிகழ்வில் இந்தக் கப்பல்கள் இருப்பது இந்திய கப்பல் கட்டும் தளங்களின் உள்நாட்டு கப்பல் கட்டும் திறன்களை வெளிப்படுத்துவதற்குப் பங்களித்தது.

சர்வதேச கடற்படை மதிப்பாய்வின் ஓரத்தில், வைஸ் அட்மிரல் பி. தாஸ்குப்தா வங்காளதேச கடற்படையின் கடற்படைத் தலைவர் அட்மிரல் எம் ஷாஹீன் இக்பாலை சந்தித்தார். ஈரான், மாலத்தீவு, மியன்மார், கொரியக் குடியரசு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் அவர் இருதரப்பு உரையாடல்களையும் நடத்தினார்.

பங்களாதேஷ் நடத்திய முதல் சர்வதேச கடற்படை மதிப்பாய்வு இதுவாகும். பங்களாதேஷின் ஐம்பது ஆண்டுகால விடுதலையின் கொண்டாட்டங்கள் மற்றும் 'ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்' மற்றும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 06 அன்று கொண்டாடப்படும் 'மைத்ரி திவாஸ்' ஆகியவற்றை இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையே முறையான இராஜதந்திர உறவுகளை நிறுவுவதைக் குறிக்கும் வகையில் இந்த சர்வதேச கடற்படை மதிப்பாய்வு நிறைவு செய்கிறது.




பங்களாதேஷால் நடத்தப்பட்ட முதல்சர்வதேசகடற்படைமதிப்பாய்வில் இந்தியக்கடற்படையின் இருப்பு, இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளையும், கடல்சார் களத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்தியக் கடற்படையின் பங்கையும் மீண்டும் வலியுறுத்துகிறது.

(நன்றி:ஏ.என்.ஐ.)

# இந்தியா - ஆஸி நாடுகளுக்கு இடையே நடைபெற்ற கூட்டு இராணுவப் பயிற்சி!






இந்தியா – ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இடையே நடைபெற்ற கூட்டு இராணுவப் பயிற்சியான 'Austra Hin- 22' இடையே, ஆஸ்திரேலிய இராணுவத்தின் மேஜர் ஜெனரல் கிறிஸ் ஃபீல்ட், இந்தியாவின் இராணுவ துணைத் தலைவர் (வியூகம்) லெப்டினன்ட் ஜெனரல் எம்.வி. சுசீந்திர குமாரைச் சந்தித்து பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதித்தார்.

"ஆஸ்திரேலிய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கிறிஸ் ஃபீல்ட், லெப்டினன்ட் ஜெனரல் எம்.வி. சுசீந்திர குமார் டி.சி.ஓ.ஏ.எஸ் (ஸ்ட்ராட்) ஐ சந்தித்து, இரு நாட்டு ஈராணுவங்களுக்கும் இடையே நடைபெற்று வரும் கூட்டுப் பயிற்சி "AustraHind" குறித்தும், இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் விவாதித்தார் என்று இந்திய இராணுவமத்தின் பொதுத் தகவல் இயக்குநரகத்தின் கூடுதல் அதிகாரபூர்வ பிரிவின் டுவீட் தெரிவித்தது.

ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் இராணுவங்களுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான 'Austra Hind 22' நவம்பர் 28 அன்று ராஜஸ்தானின் மஹாஜன் ஃபீல்ட் ஃபயர் ரேஞ்சில் தொடங்கியது. ஐ.நா. ஆணையின் கீழ் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் அது கவனம் செலுத்தியது.

டிசம்பர் 11 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்தப் பயிற்சியானது, இராணுவ உறவுகளை வலுப்படுத்துவது, சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டமைந்தது.

இந்தக் கூட்டுப் பயிற்சியின் போது, துருப்புக்கள் ட்ரோன் தொழில்நுட்பத்தில் தங்கள் நிபுணத்துவத்தை பரிமாறிக்கொண்டனர்.

இந்திய இராணுவம் மற்றும் ஆஸ்திரேலிய இராணுவத் துருப்புக்கள் போரில் nanodrones உட்பட அதிநவீன ட்ரோன் தொழில்நுட்பத்தின் வேலைவாய்ப்பில் தங்கள் நிபுணத்துவத்தை பரிமாறிக்கொண்டனர் என்று இந்திய இராணுவம் டுவீட் செய்தது.

ஆஸ்திரேலிய இராணுவக் குழுவில் 2 ஆவது பிரிவின் 13 ஆவது படைப்பிரிவின் வீரர்கள் உள்ளனர். அதே நேரத்தில் இந்திய இராணுவம் டோக்ரா படைப்பிரிவின் துருப்புக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சகத்தின்படி, நேர்மறையான இராணுவ உறவுகளை உருவாக்குவது, ஒருவருக்கொருவர் சிறந்த நடைமுறைகளை உள்வாங்குவது மற்றும் அரை பாலைவன நிலப்பரப்பில் பல – டொமைன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒன்றாக செயல்படும் திறனை மேம்படுத்துவது என்று இந்த நடவடிக்கை குறித்துப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

'ஆஸ்ட்ரா ஹிந்த்' என்பது இந்தியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் மாற்றாக நடத்தப்படும் வருடாந்திர நிகழ்வு ஆகும்.

(மூலம்: ஏ.என்.ஐ.)

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நாடு கடந்த தமிழீழ அரசு



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 236



இந்த அரசு விடுதலை புலிகளால் ஏற்படுத்தப்பட்ட காலம் தொட்டு அதன் பிரதமராக விஸ்வநாதன் உருத்திரகுமாரன் பணியாற்றுகிறார். தனது வாழ்வாதாரத்துக்கான சட்டத்தரணி தொழிலின் கடமைகளோடு இந்தப் பதவி பல அர்ப்பணிப்புகளை அவரிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை, மாறாகக் கட்டாயப்படுத்துகிறது. இந்தப் பதவியை ஏற்பதற்கு முன்னர் அவர் விடுதலை புலிகளின் சர்வதேச சட்டத்தரணியாகச் செயல்பட்டு அவர்களுக்காக பல சமயங்களில் சர்வதேசத்துடனும் சர்வதேச அமைப்புக்களோடும் தொடர்புகளைப் பேணியவர்.

அமெரிக்கா விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகப் பட்டியலிட்டபோது அங்கு அதை எதிர்த்து வழக்குகள் தாக்கல் செய்தும், நடத்தியும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குசட்டத்தரணிகளின்ஆதரவுகளை தேடியதும் என அவரது பல பணிகள், காலம் காலமாக பல போராட்டங்கள், சம்மேளனங்கள் உண்டு.

நாடு கடந்த தமிழீழ அரசின் நோக்கங்களாக, தமிழ் மக்களுக்குத் தனியான அரசை உருவாக்குதல், தமிழ் மக்கள் மேல் நடத்தப்பட்ட இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள், போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு பொறுப்புக் கூறலை நிலை நாட்டுதல் என்பவை கூறப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் சர்வதேசங்களுக்கும் மனித உரிமை மன்றுகளுக்கும் சமர்ப்பணங்கள் தந்து கொண்டிருக்கிறார்கள் –தொடர்ந்த அழுத்தங்களுக்காக.

தற்சமயம் பரபரப்பாக பேசப்படும் இனப் பிரச்சினைக்கான தீர்வையொட்டி உருத்திரகுமாரன் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக, "சிங்கள இன அழிப்பில் இருந்து ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதான அரசியல் பொருளாதார பாதுகாப்புக்களுடன் இறுகப் பிணைந்த தீர்வு நோக்கியே பேச வேண்டும்" என செய்தி தருகிறார்.

அதேசமயம் முள்ளிவாய்க்கால் ஈடு செய் நீதியின் அடிப்படையில் – ஈழத் தமிழர்களின் சுயநிர்ண அடிப்படையில் – தெரிவு செய்த தீர்வு ஒன்றே அப்படியான பாதுகாப்பைத் தரும். அவ்வாறு இல்லாத ஒன்று தீர்வாக அமையப் போவதில்லை. உலக அரசியலின் ஒற்றை ஆட்சி ஒழுங்கிலிருந்து விடுபட்டு இரட்டை மைய அரசியலுடன் நோக்கி நகர்ந்து கொண்டு, அரசியல் பொருளாதார பாதுகாப்புகளுடன் அமைந்த தீர்வைப் பெற வேண்டும் என்பதும் அவர் கருத்து.

### சர்வதேச வழமைகளும் ஆளுமையின் தாக்கங்களும்

1956 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் சமஷ்டி கோரிக்கையை அரசியலின் அதிகாரப் பகிர்வாக வைத்த போது, தொடங்கிய அட்டூழியங்களையும், அடக்குமுறைகளையும் சர்வதேசம் அறிந்திருந்தது. இவற்றால் தமிழ் மக்கள் பின்னர் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி, இறைமையைக் கேட்ட போதும், தமிழீழம் அமைப்பதற்கான இடைக்கால கவுன்சில் அமெரிக்காவில் அறிவிக்கப்பட்ட பொழுதும், சர்வதேச அரசுகள் இவற்றை கோரிக்கைகளாக மரியாதையின் நிமித்தம் பெற்றுக் கொண்டன. அவற்றை தமிழர் தரப்புகள் ஒற்றுமையாக, சம காலங்களில் சர்வதேச கடற்பரப்பின் அலைகளை சமாளித்து, சாதுரியமாக முன்னேற்றாமல், பிரிந்து நின்று, கடற்பரப்பில் கட்டுமரம் ஓட்டி, அந்தக் கட்டுமரம் செல்லக் கூடிய தூரங்களில் பயணிக்க முடிந்தது.

ஆயுதப் போராட்டமும் இராணுவ பலமும் வினைத்திறன்களாலும் அர்ப்பணிப்



புகளாலும் பெரிய அளவு வளர்ந்து இருந்தாலும், சர்வதேச அரசியலின் நடப்புகளை அணுகி, அவற்றை யதார்த்தமாக முன்னேற்றக் கூடிய பாதைகள் முடக்கம் பெற்றவையாகவே தோற்றம் கொண்டன.

மண்ணில் இருந்து பெறப்பட்டவற்றை முன்னெடுத்து செயலாற்றுவது புலம்பெயராளரின் கடப்பாடு என்ற மரபு கடைப்பிடிக்கப்பட்டதும், மாறுபட்ட கருத்தாக்கத்தை சர்வதேச அணுகு முறையில் கூட வளர விடுவது பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற சிந்தனைகளில், ஆயுதப் போராட்ட வெற்றிகளில் யாவற்றையும் இணைத்தவை என்பவற்றில் நடந்தவற்றைப் பற்றியும், அவை பற்றி சர்வதேசத்தின் பார்வைகள் குறித்தும் உருத்திரகுமாரன் அறிந்து கொள்ளாதவர் அல்லர்.

பேச்சுவார்த்தைக் காலங்கள், பின்போர், முள்ளிவாய்க்கால், அதன்பின் ஐ.நாவின் தீர்மானங்கள் என நடந்தவை யாவற்றிலும் அவர் ஐக்கியமாக இருந்தார்.

தமிழ் சமுதாயம் முழுவதுமே ஒட்டு மொத்தமாக தனிநாடு ஒன்றினை அமைத்து சிங்களத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை பெறுவதுதான் அவர்களது அரசியல், பொருளாதாரத்திற்கு வழி கோலும் என்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தனிமனித பாதுகாப்பும், கௌரவமும், தன்மானமும் தரக்கூடியது என சர்வதேச சுயநிர்ணய வாக்கடுப்பில் வாக்களிப்பார்கள். அது நிதர்சனம்.

ஆனால், அதனை அடைந்து கொள்வதின் மார்க்கம் என்ன? ஆயுதப்போராட்டத்தின் அழுத்தங்களினாலோ அல்லது வெற்றியின் மூலமோ ஸ்ரீலங்காவைப் பணிய வைக்கலாம் என்பது நிர்க்கதியில் முடிந்துள்ளது.

கடைசியிலும் களத்திலேயே நின்று வீர மரணத்தை ஏற்று, பிரபாகரன் தமிழ்



மக்களைக் கைவிட்டுப் போகவில்லை, ஐ.நாவின் நடு முற்றத்தில்தான் விட்டுகச் சென்றுள்ளார் என்று நம்பிக்கை கொண்டவர்கள் உண்டு. ஆனால், முள்ளிவாய்க்கால் நடத்தப்பட்டதால் ஈடுசெய் நீதியில் தீர்வு ஏற்படும், சர்வதேசம் அதனைத் தரக் கடமைப்பட்டுள்ளது என கானல் தேசங்களுக்கு மக்களை அழைப்பது அபத்தம்.

அவை சரியான எதிர்பார்ப்பாகவும் சர்வதேச சட்டங்கள் கூறுவனவாகவும் இருக்கலாம். ஆனால் நடைமுறைகளில் நடத்தப் பெற்றவை, அதற்கான யதார்த்தங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, நடக்கக் கூடியவற்றைப் பேச வேண்டும். பேசுபவற்றை செய்ய வேண்டும். இலட்சிய அரசியலின் சிக்கலான சுலோகங்களை விக்கிரமாதித்தன் போன்று தளராமல் சொல்வதில் பலன் உண்டா?

ரூவண்டாவில் நடந்த இனப்படுகொலைக்கு எந்த ஈடுசெய் நீதியில் தீர்வு சர்வதேசங்களால் தரப்பட்டது? பாலஸ்தீனிய நாட்டை உருவாக்குவதில் சர்வதேசத்திற்கு இருக்கும் கட்டுப்பாடுகள் அல்லது இயலாமைகள் என்ன? இஸ்ரேலினால் தொடர்ந்து செய்யப்படும் அநீதிகளுக்கு சர்வதேசம் ஏதாவது ஈடு செய்துள்ளதா? தீர்மானங்கள் இயற்றுவதைத் தவிர செய்யக்கூடியதாக இருக்கிறதா? அதற்கு அமெரிக்கா பின்னணியில் உள்ளது என்பது சர்வதேசம் அறிந்தது தானே?

தமிழ் மக்கள் இந்தியாவை சாதகமாக்க வேண்டிய நிலை இல்லையா?

தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## மைத்திரி உட்பட பல ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல முடியாது என உயர் நீதிமன்றம் கடந்த 2022 செப்டம்பர் 26 ஆம் திகதி அறிவித்தது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக அரசியலமைப்பின் 35 (1) உறுப்புரை பிரகாரம் வழக்கொன்றை முன்னெடுத்து செல்ல முடியாது என அறிவித்து உயர் நீதிமன்றம் அதனை அறிவித்திருந்தது.

அவ்வாறான பின்னணியிலேயே இந்த மனுக்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியை சந்திக்க செல்கின்ற போது நிலங்களை சுவீகரிக்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, எடுக்கப்பட்ட நிலங்களை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கும் செயலை செய்ய வேண்டும் எனக் கோரினோம். அதேபோல் அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக பேசியமையுடன், அவர்கள் உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டும்எனவலியுறுத்தினோம். காணாமல் போனோர் சம்மந்தமான பிரச்சினை தொடர்பிலும் பேசினோம். இவ்வாறான விடயங்களை உடனடியாக செய்ய வேண்டும் என 31 ஆம் திகதி காலக்கெடு கொடுத்து இருந்தும் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இவை தொடர்பில் ஒன்றுமே நடைபெறவில்லை. இதனை நாம் ஜனாதிபதிக்கு நேற்று (முன்தினம்) தெரியப்படுத்தினோம். 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் போது நிலம் சம்பந்தமாகத் தான் சில தீர்மானங்களை எடுப்பார் எனாவர் கூறினார். காணிகள் தொடர்ந்தும் பறிக்கப்படுகின்றன.

அரசியல் யாப்பில் உள்ள அதிகார பரவலாக்கல் சட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஏற்கனவே சட்டங்கள்ஊடாக எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தோம். அதில் பொலிஸ், நில அதிகாரங்கள் சம்பந்தமாக சில முணு முணுப்புக்களை அங்கு காண முடிந்தது. எதிர்வரும் 4 ஆம் திகதி தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி சொல்லியிருந்தார். ஆனால் எதுவும் நடைபெறாமல் தொடர்ச்சியாக மேசையில் பேசி போகும் நிலைதான் காணப்படுகின்றது. ஆகவே, நாங்கள் கூறிய விடயங்களில் எதை செய்யப் போகின்றீர்கள் என்பதை வெளிப்படையாக சொல்லுங்கள், அதன் பின் நாம் தொடர்ந்து பேசுவதா, இல்லையா எனத் தீர்மானம் எடுப்போம் எனத் தெரிவித்தோம். அரசியல் யாப்பில் உள்ள விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்த முடியாதவர்கள் எப்படி இனப் பிரச்சினையை தீர்க்க முடியும்? நாங்கள் போயிருக்கா விட்டால் தாம் பல விடயங்களை செய்ய இருந்தார்கள் எனவும், நாம் வர வில்லை எனவும் கூறுவார்கள். அதற்காகவே பேச்சுவார்த்தைக்குச் சென்றோம்.

தமிழ் தரப்பு வரவில்லை எனச் சொல்லியிருப்பார்கள். இதனால் சென்றோம். அவர்கள் நல்லிணக்க சமிஞ்ஞையைக் காட்ட வேண்டும். எனவே இந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைப் பொறுத்துத்தான் அடுத்த பேச்சுக்கு செல்ல முடியும். – எனத் தெரிவித்தார்.

இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித் தனியாக பிரிந்து உள்ளுராட்சி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு செல்வம் அடைக்கலநாதன் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் எப்படி என்பது உங்களுக்கு தெரியும். இறுதியாக மூன்று கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து பயணித்தன. எங்களைப் பொறுத்தமட்டில் நானும், சித்தார்த்தன் அவர்களும் கட்சி ரீதியாக தமிழரசுக் கட்சிக்குக் கடிதம் எழுதினோம். ஏனைய கட்சிகளையும் அரவணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி, அதனூடாக நாங்கள் எல்லோருக்கும் வலுவான ஒற்றுமையாக இருப்பதாக காட்ட முடியும். மக்களது அபிலாசைகளை வென்றெடுக்க முடியும். நாங்கள் 6 கட்சிகள் ஐ.நா சபைக்கு கடிதம் எழுதினோம். பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் கடிதம் எழுதினோம்.

இதன்போது, எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட்டதன் காரணமாக ஏனைய தேசிய கட்சிகளையும் உள்ளெடுப்பது சம்பந்தமாக சம்பந்தன் ஐயாவுடனும் பேசினோம். கடிதமும் எழுதினோம். ஆனால் அந்த கடிதத்திற்கான பதில் வருவதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிடுகின்ற முடிவை எடுத்திருந்தார்கள். அந்தவகையில், நாங்கள் வைத்த கோரிக்கைகு பதில் தராது, இந்த முடிவை எடுத்து, வெளியில் செல்லும் நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

கூட்டமைப்பில் இருந்து வெளியே சென்ற கட்சிகளில் உள்ளே வர வேண்டும் என கருதிய கட்சிகள் எல்லோரும் அணி திரண்டுள்ளோம். குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் எமது கூட்டில் இணைய வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினையை வென்றெடுப்பதற்கு நாங்கள் பலமான கூட்டாக ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். அதனடிப்படையில் இந்த கூட்டில் வந்து இணைய வேண்டும் என நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

எனவே கூட்டு என்பது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் செயற்படும். அதில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பங்களிப்பு இருக்கும். தனிப்பட்ட கட்சிகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டுக் கொடுக்க முடியாது. மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் தனித்து செல்ல தமிழரசுக் கட்சி முடிவெடுத்தது. ஆனால் மட்டக்களப்பு மாவட்ட பத்திரிகையாளர்கள் இந்த கூட்டமைப்பு உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்டார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இந்த தேர்தலில் போட்டியிடும். தொடர்ச்சியாக 6 கட்சிகள் ஒற்றுமையாக பயணித்தோம்.

தேர்தல் தொடர்பில் எங்களது கடிதத்திற்கு எதுவும் தெரிவிக்கவில்லை. அவர்களது முடிவு கவலையளிக்கிறது. மக்கள் ஒற்றுமையைத் தான் விரும்புகிறார்கள். அவர்கள் தங்களது தனித்துவத்தை காட்ட வேண்டும் என நினைக்கிறார்களா எனத் தெரியவில்லை. கூட்டமைப்பில் இருந்து ஒரு கட்சி விலகிச் சென்றாலும், முன்னர் விலகிச் சென்றவர்கள் உள்ளே வந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் மக்கள் எமக்கு ஆதரவு தருவார்கள். கூட்டமைப்பு சிதைவு பட முடியாது. மக்கள் எமது பக்கம் இருப்பார்கள். தற்போது தேர்தல் ஒன்று வந்துள்ளது. தேர்தல்தான் எங்களது குறிக்கோள் அல்ல. இந்த தேர்தல் முடிந்த பின் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட கட்டமைப்பை உருவாகின்ற – தொடர்ச்சியான தலைமைத்துவத்தை கொண்டிருக்கின்ற – மக்களது ஆலோசனைகளைப் பெறுகின்ற – செயற்பாடுகளை செய்ய இருகின்றோம். தனிப்பட்ட கட்சிகளின் விருப்பு வெறுப்பு இங்கு இருக்காது. இது ஒரு கூட்டு. சுழற்சி முறையில் தலைமைத்துவம் பேணப்படும். நாம் பிளவுபடாமல் மக்களது நம்பிக்கையை வீணடிக்காது, மக்களது நலனை முன்னிறுத்தி கட்டுக்கோப்பாக செயற்பட வேண்டும். அதற்கு கூட்டமைப்பு பதிவு செய்யப்படும். பொது சின்னம் தெரிவு செய்யப்படும். தற்போது பொது சின்னத்தில் போட்டியிட வாய்ப்புள்ளது. – எனவும் தெரிவித்தார்.

## வருடத்தின் முதல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

அதற்கமைய கடந்த 2 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை 2,142 டெங்கு நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 440 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதனைத் தவிர, கொழும்பில் 433 டெங்கு நோயாளர்களும், புத்தளத்தில் 273 டெங்கு நோயாளர்களும், கல்முனையில் 147 டெங்கு நோயாளர்களும், யாழ்ப்பாணத்தில் 128 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தலா 100 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளாால் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் பாடசாலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலை ஒன்றில் இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்விற்கு மாணவர்கள் எவ்வாறு சமுகமளிக்க வேண்டும் என்பது தொடர்பிலும், மாணவர்களது ஒழுக்கம் தொடர்பிலும் பாடசாலை மாணவர்களுக்கு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட போதே அதிபர் மற்றும் ஆசிரியர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. பாடசாலையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி பாடசாலை மாணவர்களின் ஒழுக்க நடைமுறைக்கு மாறாகவும், காதில் தோடு அணிந்தவாறும் மாணவன் ஒருவர் நிகழ்விற்கு சமூகமளித்திருத்துள்ளார். அந்த மாணவனை அவதானித்த அதிபர், மாணவன் அணிந்திருந்த தோட்டைக் கழற்றிவிட்டு மாணவர்களின் ஒழுக்கத்துடன் வருமாறு கூறி அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்து சென்ற மாணவன் மது அருந்திவிட்டு பாடசாலைக்கு வருகை தந்து நிகழ்வு மண்டபத்தில் அதிபர், விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருந்த போது கொட்டனால் அதிபர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இதன்போது அங்கு விருந்தினராக கலந்து கொண்ட பிரதிநிதி ஒருவருக்கும் சிறு காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த அதிபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையுடன், சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பாடசாலை பழைய மாணவர்கள் அந்த மாணவனைப் பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவனாவார்.

இதேவேளை, நேற்றைய தினம் பிறிதொரு நகரப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற உயர்தர மாணவர் ஒன்று கூடலின் போது மாணவர்கள் மோட்டர் சைக்கிள் மற்றும் கார்களுடன் பாடசாலை வளாகத்திற்குள் அதிக ஒலி எழுப்பி அசௌகரியத்தை ஏற்படுத்தியமையால் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் சிலர் வெளியேறிச் சென்றிருந்தமையும் குறிப்படத்தக்கது.

## தொண்டைமானாறு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து நீரில் மூழ்கிய நிலையில் முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு வந்த முதியவர் நீரேரியில் நீராட முற்பட்ட சந்தர்ப்பத்தில் நீரில் மூழ்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மோ.சைக்கிளில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூடு நடத்தப்பட்டுள்ளது.

ராஜா தயானந்த என்ற 50 வயது நபர் தனது பிள்ளையை பாடசாலையில் விட்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது துப்பாக்கியால் சுடப்பட்டார்.

கெம்பனே அலுத் வீதி பகுதியில் பாழடைந்த இரண்டு வீடுகளுக்கு அருகிலுள்ள வளைவில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பனாமுர பொலிஸார், துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட சந்தேக நபரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## ஆஷூ மாரசிங்கவை .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மமராலாலாகே வகீா ஆதர்ா சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை அவரை சி.ஐ.டியின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளுக்காக ஆதர்ா நேற்று நண்பகல் 12 மணியளவில் கணினி குற்றப் பிரிவுக்கு வந்தனர் எனவும், சம்பவம் தொடர்பில் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக வாக்கு மூலம் பெற்றதன் பின்னர் அவரை மாலை 5.00 மணியளவில் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக திகழ்ந்து இராஜினாமா செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க சி.ஐ.டியில் கடந்த 2022 டிசம்பரில் முறைப்பாடொன்றினை செய்திருந்தார்.

அதில் தான் சம்பந்தப்பட்டார் எனத் தெரிவித்து வீடியோ ஒன்றை வெளியிடப் போகிறா எனவும் அவ்வாறு செய்யாமல் இருக்க 10 கோடி ரூபா வழங்க வேண்டும் எனவும் ஆதர்ா அச்சுறுத்தினார் என ஆஷு மாரசிங்க குறிப்பிட்டிருந்தார்.

அது தொடர்பில் விசாரணை செய்த சி.ஐ.டியின் கணணி குற்ற விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் லகீ ரந்தெனியவின் கீழான குழு, ஆதர்ாவை நேற்றுக் கைது செய்தது. இந்நிலையில் இன்றையதினம் அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

முன்னதாக பேராசிரியர் ஆஷு மாரசிங்க, அவரது காதலியின் செல்லப் பிராணியான நாய்க் குட்டியை பாலில் ரீதியாக துன்புறுத்தினாரென, கடந்த 2022 டிசம்பர் 23 ஆம் திகதி ஊடக சந்திப்பொன்றூடாக அது குறித்த காணொலிகள் மற்றும் புகைப்படங்கள் பகிரங்கப் படுத்தப்பட்டன.

ஆஷு மாரசிங்கவுடன் கடந்த 2 வருடங்களாக திருமணம் முடிக்காமல் ஒன்றாக வாழ்ந்த அவரது காதலி எனக் கூறப்படும் ஆதர்ா கரடான , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுடன் இணைந்து ஊடக சந்திப்பொன்றினை நடாத்தி இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர்
Kalaikkathir

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் ஊழியர்களுக்குக் குரங்குக் காவல் பணி!





(ஈழமகன் – முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில், பிரதேச செயலகத்தின் கீழுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களாகிய தம்மை பிரதேச செயலாளர் குரங்குக் காவலுக்கு அமர்த்துகிறார் என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடை விழா கடந்த வருடம் புரட்டாதி மாதம் இடம்பெற்றிருந்தது.

அதற்கான அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் தொடர்பில் குறித்த பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்ட மாவட்ட செயலாளர் மாந்தை கிழக்கின் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வாழ்த்தியிருந்தார்.

ஆனால் தற்போது ஒவ்வொரு நாளும் காலை 7 மணியளவில் பிரதேச செயலக வளாகத்துக்குள் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பகுதிக்கு வருகை தந்து 2 மணித்தியாலங்கள் ஒவ்வொரு உத்தியோகத்தரும் மாறி, மாறி குரங்குக்கு காவல் இருக்கவேண்டும் என பிரதேச செயலாளர் பணித்துள்ளார் எனத் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள், வெளி மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு பணி நாள்களிலும், குறித்த பகுதியை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பணிநாள்கள் தவிர்ந்த விடுமுறை நாள்களிலும் குரங்கு காவல் இருப்பதாகக் கூறுகின்றனர். உத்தியோகத்தர்கள் காலை 7 மணியில் இருந்து மாலை 6 மணி வரை தாம் ஒவ்வொருவரும் 2 மணித்தியாலங்கள் குரங்கு காவல் இருக்கவேண்டி உள்ளது எனவும் இது தொடர்பில் தாம் மிகுந்த மன உளைச்சல்களுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்ச்வும் தெரிவித்துள்ளனர்

தாம் பட்டப்படிப்பினை முடித்து விட்டு குரங்கு காவல் இருப்பதாக எமது செய்தி சேவைக்கு கவலையுடன் தெரிவித்த ஆண் உத்தியோகத்தர்கள், தம்மை விடப் பெண் உத்தியோகத்தர்கள் நிலைமை மிக மிக மோசம் எனக் கவலை வெளியிட்டுள்ளனர்

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பெண் உத்தியோகத்தர்கள் காலை 7 மணிக்கு குரங்கு காவலை பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலைமை இருக்கும் போது, எமது சிறு பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதா, அல்லது தமது குடும்ப தலைவர்களுக்கு சமைத்து வைப்பதா,அல்லது குரங்கு காவலுக்கு வருவதா என்ற தர்மசங்கடமான நிலைமை உருவாகின்றது" – என்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அரசமைப்பின் தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங்கள் திருத்தப்படும் வரை முழுமையான 13 சாத்தியமில்லை!

## அமைச்சர் டக்ளஸ் தெளிவுபடுத்துகிறார்



அரசமைப்பில் காணப்படுகின்ற தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங்களால் உருவாகின்ற தடைகள் நீக்கப்படாவிட்டால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை திறம்பட அமுல்படுத்துவது சாத்தியமில்லை என்பதே கடந்த 30 வருடங்களுக்கும் மேலான மாகாணசபை முறைமையின் அனுபவமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மூன்று கட்டங்களாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை பூரணமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவில் அங்கம் வகிப்பதுடன், இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களிலும் தொடர்ச்சியாகக் கலந்துகொண்டு வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள எழுத்துமூல ஆவணத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது, ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாகவும் நிர்வாக அதிகாரங்களுக்கு ஊடாகவும் மத்திய அரசாங்கத்துக்கு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் மாகாண அரசாங்கங்களிடம் கையளிப்பது முதலாவது கட்டம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சட்டங்களுள், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இடையூறாக இருக்கின்றவற்றை ஆராய்ந்து, அவை 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் பொருந்தும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுதல் இரண்டாவது கட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக, 13 ஆவது திருத்தத்தின் சில விதிகளில் உள்ள தெளிவின்மையை நீக்குவதற்கும், தெளிவான முறையில் அதிகாரங்களை வரையறை செய்வதற்கும் மற்றும் ஒதுக்கீடு செய்வதற்கும், அத்தோடு சட்டமியற்றுதல், நிர்வாக, நீதித்துறை மற்றும் நிதி அதிகாரங்களை அரசாங்கத்தின் பல்வேறு அடுக்குகள் மூலம் பயன்படுத்துவதற்கான வரையறைகளை உருவாக்குவதற்குத் தேவையான அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளுதல், போன்ற செயற்பாடுகளின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்க முடியும் என்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) மீண்டும் மீண்டும் கூறி வருகிறோம். இந்த நிலைப்பாட்டில் நாங்கள் நீண்ட காலமாக நிலையாக இருந்து வருகிறோம்.

சில அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக, 13 ஆவது திருத்தம் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என்று கூறினாலும், 1988 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு முதன் முறையாக நடைபெற்ற தேர்தல்களைத் தவிர, கிழக்கு மாகாணத்தில் இரண்டு தடவைகளும் வடமாகாணத்தில் ஒரு முறையும் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டதுடன் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இது மாகாண சபை அமைப்பை ஏற்றுக்கொள்ளும் அனைவரினதும் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. மற்ற மாகாணங்களிலும் மக்கள் இப்போது இந்த முறைக்கு பழகிவிட்டனர், அதைத் தொடர்வதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. 13 ஆவது திருத்தத்தின் ஊடான அதிகாரப் பகிர்வை சரியான முறையில் வரையறைப்படுத்தி அர்த்தமுள்ள முறையில் செயற்படுத்துவது ஒரு ஐக்கிய நாட்டுக்குள் பன்முகத்தன்மையையும் மற்றும் பன்மைத் தன்மையைக் கையாள்வதற்கான வழிமுறையையும் வலுப்படுத்தும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு பிரிந்து போட்டியிடுவதற்கான காரணத்தை வெளியிட்டார் சாள்ஸ் எம்.பி.!



மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளும் இணைந்து மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்துக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக நேற்று(புதன்கிழமை) மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை தனித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதன் பிரதான நோக்கம் 2018 ஆம் ஆண்டு தேர்தல் முறைமை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்திரம் தனித்து போட்டியிடுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உதாரணமாக மன்னார் நகரசபையில் நாங்கள் ஒரு வட்டாரத்தைத் தவிர மிகுதி வட்டாரங்களைத் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பு கைப்பற்றி இருந்தது.

ஆனால், தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களால் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டு வேறு கட்சியை சேர்ந்தவர்களை அழைத்தே நாங்கள் ஆட்சி அமைத்தோம். அதன் காரணமாகவே தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுவதாகவும், வெற்றி பெற்று வருகின்ற உறுப்பினர்கள் ஒன்றாக ஆட்சியமைப்பதாகவும், கடந்த 3 மாதங்களுக்கு முன்பே எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடிக்கதைத்தோம்.

அதனடிப்படையில் கட்சிகள் முடிவெடுத்துள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் மூன்று கட்சிகள் சார்பாகப் போட்டியிட்டால் மூன்று கட்சி சார்பாகவும் வாக்களிக்குமாறு தெரிவிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் இணைந்து மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.மாநகர எல்லைக்குள் டெங்கு ஒழிப்பு 9 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 111 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, சிவப்பு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதார பிரிவு அறிவித்துள்ளது.

பருவ மழையை அடுத்து யாழில் டெங்கு நுளம்பின் அதிகரிப்பு காரணமாக, யாழில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்தது. கடந்த ஆண்டில் 09 பேர் டெங்கு காய்ச்சலால் யாழில் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது , 1,505 குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன் போது 74 குடியிருப்புக்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டன. அதில் 65 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதேவேளை, டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 111 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு , அவர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

# மலையகத் தியாகிகள் நினைவேந்தல் நிகழ்வு!



மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த மலையக தியாகிகள் தினம் செவ்வாய்க்கிழமை பெருந்தோட்டப்பகுதிகளில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்ட கலை, கொமர்ஷல் லேக் பகுதியில் நடைபெற்றது.

மலையக மக்களுக்கான தொழில் சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப்போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளையும் நினைவுகூர்ந்து பிற்பகல் 03 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வின் ஏனைய அம்சங்கள் ஆரம்பமாகின.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10 ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு கடந்த 2019 டிசெம்பர் 15 ஆம் திகதி தலவாக்கலை, டெவோனில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்படியே ஜனவரி 10 ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021 ஆம் ஆண்டு பத்தனை சந்தியில் நடைபெற்றது. இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மலையக உரிமைக் குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களும், மலையக புத்திஜீவிகளும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், தியாகிகளின் உறவினர்களும், அரசியல்வாதிகளும், தொழிற்சங்கவாதிகளும் கலந்துகொண்டனர்.

# மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டை வைத்திருக்கின்ற நாடுகள் பட்டியலில் இலங்கை 100 ஆவது இடத்தில்!

உலகின் மிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டை வைத்திருக்கும் நாடுகள் பட்டியலில் தொடர்ந்தும் 5 ஆவது ஆண்டாக ஜப்பான் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஆசிய நாடுகளான சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா இரண்டாவது இடத்தையும் அதன்பின்னர் ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

லண்டனை தளமாகக் கொண்ட உலகளாவிய குடியுரிமை மற்றும் குடியிருப்பு ஆலோசனை நிறுவனமான ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது. பாதுகாப்பற்ற கடவுச்சீட்டை வைத்திருக்கும் நாடுகள் பட்டியலில் ஆப்கானிஸ்தான் இறுதி இடத்திலும் பாகிஸ்தான் 106 ஆவது இடத்திலும் இலங்கை 100 ஆவது இடத்திலும் உள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2023இல் வெளியிடப்பெற்றது.